தென் இந்திய சமய சரித்திர
கலாச்சார சுற்றுலா
சித்திரை நடுப்பகுதியில்
திருச்சி ◦ அழகர் கோவில்
◦ மதுரை ◦ சுசீந்திரம்
◦ பாஞ்சாலங்குறிச்சி ◦ சிதம்பரம்
◦ எட்டயபுரம் ◦ குற்றாலம்
◦ ஆறுபடை வீடு ◦ நாகூர்
◦ வைத்தீஸ்வரன் ◦ திருவண்ணாமலை
◦ திருக்கழுக்குன்றம்
◦ கன்னியாகுமரி ◦ தஞ்சாவூர்
◦ சீர்காழி ◦ வேளாங்கண்ணி
◦ மைசூர் ◦ சென்னை ◦ பெங்களூர்
◦ காஞ்சிபுரம் ◦ கொடைக்கானல்
இன்னும் பல
விபரம்: சத்தியா றவல்ஸ்

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No· QB/8945/78

மலர்: 21 பங்குனி 19 ஜ-அவ் 4 இதழ்: 50
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 2-4-79

தென் இந்திய சமய சரித்திர
கலாச்சார சுற்றுலா சித்திரை 79
கட்டணங்கள்
ரூபா 960/- (இலங்கையிலிருந்து
இந்தியா சென்று திரும்பும் பிரயாணச்
செலவு.) சாப்பாட்டுச்செலவு பங்கு
பற்றுவோரைச் சார்ந்தது. பிரத்தி
யேக பஸ் மூலம் தமிழகத்தில் சுற்றுலா
சொற்ப ஆசனங்கள் மட்டுமேயுண்டு.
சத்தியா றவல்ஸ்
(அரசு பதிவு பெற்றது)
இலங்கை உல்லாசச்சபை அங்கீகாரம்,
அன்னிய செலாவணி ஏற்றுக்கொள்ள
அங்கீகரிக்கப்பெற்றது.
224/A, கே கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம் — போன்: 7677

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS
RECEIVED
1979-4-0?
PERIODICALS DIVISION

# "அரசு கூறும் மாற்றுத்திட்டம் தமிழ்மக்கள் முதலில் ஏற்கவேண்டும்!

## பேச்சுவார்த்தைக்கு 'தமிழ் ஈழம்' முட்டுக்கட்டையாக இருக்காது

### பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் 'அமிர்'

(கொழும்பு)

"அரசாங்கத்திற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையில், தமிழர்பிரச்னை குறித்து பேச்சுவார்த்தை நடைபெறுமானுல், தமிழ் ஈழக் கோரிக்கை அதற்கு முட்டுக்கட்டையாக இருக்குமென்று நான் கருதவில்லை"

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு அ அமிர்தலிங்கம் நேற்று அவரது வாசஸ்தலத்தில் நடைபெற்ற பத்திரிகைநிருபர்கள் மகாநாட்டில் மேற்கண்டவாறு கூறினர்.

### மாற்றுத் திட்டம்

திரு அ அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

"அரசாங்கம் மாற்றுத் திட்டமொன்றை முன்வைத்து பேச்சுவார்த்தைக்கு எங்களை அழைத்தால் நாம் கலந்து கொள்வோம். தமிழ்மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்றுத் திட்டமாக அது அமைந்து தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டால் நாங்களும் ஏற்றுக் கொள்வோம்.

### அரசு மௌனம்

"திரு தேசாய், இலங்கை வந்தபோது பேசிய நிலையில் தான் இப்போதும் இருக்கிறர். இலங்கை அரசு அதன் பின் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை இந்தப் பிரச்னையை அரசு தீர்த்து வைக்காமல், வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு தலைவர் தீர்த்து வைத்துவிட்டார் என்ற நிலை ஏற்பட்டுவிடுமே என்பதற்காகவே அரசு மௌனம் சாதிக்கிறது போலிருக்கிறது.

"மாற்றுத் திட்டம் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வோம்.

### உள்ளூராட்சிமன்றத் தேர்தல்

"உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் திருமலை, வவுனியா, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, ஆகிய மாநகர, நகரசபைத் தேர்தல்களில் கூட்டணி போட்டியிடும். விரைவில் அபேட்சகர் பட்டியல் வெளியிடுவோம்.

"உள்ளூராட்சிமன்ற நிர்வாகத்தை கூட்டணி கைப்பற்றவேண்டும் என்பதுதான் எமது நோக்கம்.

### தமிழ்ஈழ கோரிக்கை

"தமிழ்ஈழக் கோரிக்கைக்கு குறைந்த எதையும் கூட்டணி ஏற்காதபடியால்தான் அரசு எதையும் செய்யமுடியாமல் இருக்கிறது என்று ஒரு நிருபர் கேட்டபோது பேச்சுவார்த்தைக்கு 'தமிழ்ஈழம்' கோரிக்கை முட்டுக்கட்டையாக இருக்காது என திரு ஏ அமிர்தலிங்கம் கூறினர்.

திரு அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: தமிழ்ஈழக் கோரிக்கை தமிழ்மக்களின் ஆணையாகும் தமிழ்ஈழத் தீர்மானத்தில் அந்த லட்சியத்தை அடைய முதலில் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

"சுதந்திரத்திற்குப் போராடும் எந்த இயக்கமும் லட்சியங்களில் 100 வீதம் கடைப்பிடிப்பதில்லை.

### முட்டுக்கட்டையாக இருக்காது

"இந்திய சுதந்திரப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது தலைவர்கள் பிரிட்டிஷ் அரசுடன்

(6-ம் பக்கம் பார்க்க)

---

## 'அமிர்' கூறிய 'கட்டாயக் கல்யாணக்' கதை இது!

[கொழும்பு]

[வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற தந்தை செல்வா பிறந்ததினவிழாவில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் திரு அ அமிர்தலிங்கம் தமது உரையின் நடுவே சுவைபடக்கூறிய "கட்டாயக் கல்யாணக் கதை" இது. இக் கதையை நேற்றுமுன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்திலும் பத்திரிகையாளர் மத்தியில் கூறியிருந்தார். இந்திய விஜயத்தின்போது தாம் கலந்துகொண்ட பொதுக்கூட்டங்களில் எல்லாம், இந்த "கட்டாயக் கல்யாணக் கதை"யை கூறியதாகவும் இங்கு தெரிவித்திருந்தார். 'அமிர்' கூறிய "கட்டாயக் கல்யாணக் கதை" இதுதான்:-]

"இலங்கையை முன்னர் ஆண்ட பிரிட்டிஷ்காரர், சிங்களவருக்கு எம்மை திருமணம் செய்துவைத்து விட்டுப் போய்விட்டனர். இது; ஒருமனமொத்த திருமணமல்ல. காதல் கல்யாணமுமல்ல. பலவந்தமாகச் செய்யப்பட்ட ஒரு கட்டாயக் கல்யாணம். பல்லைக் கடித்து வாழ்ந்து பார்த்தோம் முடியவில்லை. பொறுத்துப் பார்த்தோம் புருஷன் திருந்துவார் என்று நடக்கவில்லை. பொறுமை இழந்து ஒரு முடிவுக்கு வந்தோம். அதுதான் விவாகரத்து! இப்பொழுது விவாகரத்தைக் கோரி நிற்கின்ரும்.

"இதனை எப்படியோ அறிந்துகொண்ட புருஷன், பெண்ணின் தாய்க்குச் சொல்கிறர்— "உங்க பெண்ணுக்கு என்ன குறை? உடுப்பதற்கு பட்டாடை கொடுத்தேன். அணிவதற்கு பொன்னும் மணியும் கொடுத்தேன் நகைகளை வாரி வழங்கினேன். இத்தனையும் கொடுத்து திருப்திப்படாமல் உங்க பெண் என்னை விடுமாறு கோரி அடம்பிடிக்கிருள்... இது நியாயமா?" என்று தாய் வீட்டாரிடம் கூறுகின்றர்

"மனைவி, தாய்வீட்டுக்குப் போய்விடப்போகிருள்; தன்னை பற்றிப் முறையிடப்போகின்ருள் என்று எப்படியோ அறிந்து கொண்ட, கொடுமைக்காரப் புருஷன்; மனைவிக்கு முன்னதாகவே மாமியார் விட்டுக்கு வந்து "உங்க பெண்ணுக்கு என்னகுறை? பட்டாடை இல்லையா? பவுண் நகை இல்லையா...?" என்று ஒப்பாரிவைத்தார்.

"இப்பொழுது மனைவி தாய்வீட்டுக்கு வந்துவிட்டாள். "கொடுமைகள் பொறுக்க முடியவில்லை. கொடுமைக்கார புருஷனோடு இனியும் ஒரு நிமிடம் கூட வாழமுடியாது விவாகரத்தே வேண்டும்" என்று கண் கலங்குகிருள். கொடுமைக்கார புருஷன் தனக்கு 'பரிச'ளித்த சுட்ட புண்களையும் தழும்புகளையும் தாய்வீட்டாருக்கு காட்டுகின்ருள்.

"பெண்ணைப் பெற்றவள் சும்மா இருப்பாளா? மகளின். கோபம் கண்டு துடிக்காமலிருப்பாளா? கொடுமைக்காரப் புருஷன் தனது மகளுக்கு நடத்திவிட்ட சித்திரவதைகண்டு மகளைப் பெற்ற அன்னை கொதிக்காமலிருப்பாளா?

"இந்த நிலையை எடுத்துரைக்கவேதான் 'தாய் வீட்டு'க்கு வந்துள்ளேன் துயரத்தை இங்கு கூறுகின்றேன்!"

இவ்வாறு 'அமிர்' தனது கதையைக் கூறிமுடித்தார். (ம)

---

## 'ஈழத்தமிழருக்காக பாரதம் குரல் கொடுக்கும்'

### செல்வா பிறந்த தின விழாவில் 'அமிர்' நம்பிக்கை

(கொழும்பு)

தந்தை செல்வா அரசியலை ஒரு பொழுதுபோக்காவோ அல்லது தொழிலுக்காவோ கொள்ளவில்லை டொனமூர் காலத்திலே எமது உரிமை பறிக்கப்பட்டவுடன் ஜி ஜி யுடன் சேர்ந்து அரசியலில் ஈடுபட்டார்"

மேற்கண்டவாறு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தந்தை செல்வா பிறந்ததின விழாவில் எதிர்க்கட்சித் தலைவரும் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான அமிர்தலிங்கம் கூறினர்.

இவ்விழா திரு எ. ராஜமனோகரன் தலைமையில் நடைபெற்றது.

"தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும், புதுடில்லியிலும் நடைபெற்ற கூட்டங்களில் "ஈழத்தமிழரின் துயர்

(6-ம் பக்கம் பார்க்க)

---

★ குருநகர் குடியேற்றத் திட்டம்:

## ஜனதிபதியை 'யோகேஸ்' இவ்வாரம் சந்திப்பார்!

(யாழ்ப்பாணம்)

"குருநகர் குடியேற்றத் திட்ட விஷயத்தில், அரசாங்கம் மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் நடந்துவருகிறது; இத்திட்டம் குறித்து இறுதி முடிவை எடுக்கும்பொருட்டு இவ்வாரம் ஜனதிபதியைநான் சந்திக்கவிருக்கின்றேன்" என்று யாழ்ப்பாணம் எம் பி திரு வெ. யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குருநகர் குடியேற்றத்திட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான பெண்களும் பெரியோர்களும் இளைஞர்கள் பலரும் நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைச் செயலகத்தில் யாழ் எம் பி திரு வெ யோகேஸ்வரனைச் சந்தித்து தங்கள் நிலையை எடுத்து விளக்கியபோது திரு யோகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குருநகர் வீடமைப்புத்திட்டம், அரசாங்க ஊழியர்களுக்கு வீடு கட்டி கொடுப்பதற்காக சுவீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இங்குள்ள சனசமூக நிலையங்கள் பொதுநல மன்றங்கள் மூலமாக பொதுமக்கள் தங்கள் பூரண எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர் வீடின்றி மக்கள் கஷ்டப்படும் போது, தங்கள் நிலத்தில் அரசு ஊழியர்களை குடியமர்த்தி, அரசு எமது கஷ்டங்களை அதிகரிக்கிறது என்று குரல் எழுப்பப்பட்டது ஆனலும் இதை அரசு ஏற்று எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினுல் நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் குடியேற்

(6-ம் பக்கம் பார்க்க)

# அதிபர் சிபார்சில் ஆசிரியர் சம்பள உயர்வா?

## இலங்கை ஆசிரியர்சங்க யாழ். கிளை கண்டனம்

[யாழ்ப்பாணம்]

அதிபர்களின் சிபார்சின் பேரிலேயே ஆசிரியர்களின் வருடாந்தச் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கையைக் கண்டிக்கும் தீர்மானமொன்று இலங்கை ஆசிரியர் சங்க யாழ் வட்டாரக் கிளையின் வருந்டாதந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

ஆசிரியர்களை அச்சுறுத்துவதற்கும் பழிவாங்குவதற்கும் வழிவகுக்கும் இந்த நடவடிக்கையை, அரசாங்கம், எதிர் காலத்தில் ஆசிரியர்களை அடக்கி ஒடுக்குவதற்கு மேற்கொள்ளும் ஒரு பரீட்சார்த்தமாக நடைமுறைப் படுத்துதால், இதனைச் சகல ஆசிரியர்களும் ஐக்கியப்பட்டு எதிர்க்க வேண்டும் என்று இத் தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமைமாலை திரு. த கனகலிங்கம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் எவ்வித அரசியல் தலையீடுமின்றித் தமது சொந்த வீவில் பாடசாலைக்குச் செல்லாமல் நின்ற ஆசிரியர்களை வேலைநீக்கம் செய்தமையை பிட்டுக் கல்வி அமைச்சு பாரபட்சமின்றி விசாரணை நடத்த வேண்டுமென்றும், மேற்படி ஆசிரியர்களை உடனடியாக வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது

இக் கூட்டத்தில் பேசிய இலங்கை ஆசிரியர் சங்க மாவட்டக்கிளைத்தலைவர் திரு. எஸ் கே. சுந்தரலிங்கம் ஆசிரியர்களுக்கெதிரான அரசாங்கத்தின் ஜனநாயகவிரோத நடவடிக்கைகளை நாம் நேரடியான தொழிற்சங்க நடவடிக்கையின்மூலமே முறியடிக்க முடியும் என்றும், அதற்குச் சகல ஆசிரியர்களும் ஐக்கியப் பட்டுப் போராட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

நிர்வாகிகள் தெரிவின் போது, தலைவராக ஜனாப் ஏ. ஏ. செய்யது முகம்மதுவும் உபதலைவர்களாக திருவாளர்கள் அ. சின்னத்தம்பி, த. செல்வராசா ஆகியோரும் செயலாளராக திரு. என் கே. ரகுநாதனும், உபசெயலாளராக ஜனாப் எவ். எஸ். மன்சூரும் பொருளாளராக திரு.வி.கே. பாலசுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டனர். [கொ]

---


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய சப்பல் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள: 181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 2052

### பயிற்சி

குளிர்ப்படுத்தல் முறைகள் விரைவாகவும் இலகுவாகவும் கற்றுத் தரப்படும் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு இலகுவான வழி. 11-4-79ல் பயிற்சிகள் ஆரம்பம். I A.R 615, ஆல்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2030

மோட்டார் மெக்கானிக் டிப்பிளோமா 3 மாத பயிற்சி 10-04-1979 ஆரம்பமாகவுள்ளது- இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி- 11/B மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2041

### கல்வி

வீடுகள் சென்று ஆங்கில இலக்கியம், இலக்கணம் (Emma, Mc Beth, Poetry) ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக்கொடுக்கப் படும். கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 1962 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1962


---

இ. சிவசுப்பிரமணியம்
சட்டத்தரணி,
திருநெல்வேலி.

## முற்முன கட்டளைபற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

உரும்பிராய், உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த மரணித்த செல்லப்பா சேனாதிராசா என்பவரின் மரணசாதன விடயமாக.

செல்லப்பா சேனாதிராசா கைம்பெண் இராசம்மா, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

மனுதார்

இல. 3431 தத்துவம்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி இந்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதென்றும் 1979ம் ஆண்டு தை மாதம் 11ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்முன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி
(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.
1979ம் ஆண்டு தை மாதம் 11ம் திகதி.
வரைவு:
(ஒப்பம்)
இ. சிவசுப்பிரமணியம்,
மனுதார் சட்டத்தரணி. 1991

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சங்குவேலி காலஞ் சென்ற முத்துக்குமாரு இராமலிங்கத்தின் மரணசாதனத்தின் விடயத்தில்
மரணமெய்தியவர்

இராமலிங்கம் முத்துக்குமாரு அருணாசலம், சங்கானை மேற்கு, சித்தங்கேணி.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்

இல. T 29

எதிராக

1. இராமலிங்கம் கைம்பெண் இராசலட்சுமிப்பிள்ளை, சங்குவேலி.
2. கனகசபை கைம்பெண் பொன்னம்மா, வட்டுக்கோட்டை கிழக்கு.
3. கணபதிப்பிள்ளை கைம்பெண் காந்திமதி, வட்டுக்கோட்டை கிழக்கு.
4. கனகசபாபதி கைம்பெண் வள்ளியம்மை, சினியர்ஒழுங்கை, வண்ணார்பண்ணை.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றித்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம்ஆண்டுசித்திரைமாதம் 6-ந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்முனதாக்கப் படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
மூ. நல்லலிங்கம்,
பதிவாளர்,
1979-ம் ஆண்டு பங்குனி மாதம் 23-ந் திகதி. 2015

---

## பொதுசன தொடர்பாளர் நியமனம்

[சித்தங்கேணி]

பொதுமக்கள் நலன்கருதி ஒவ்வொரு பல நோக்க கூட்டுறவுச்சங்க சமாசத்திலும் கல்வி பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் ஒருவரைத் தெரிவு செய்யுமாறு பல நோக்கக் கூட்டுறவுச்சங்கச் சமாசங்களை அரசாங்கம் பணித்திருக்கின்றது.

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மானிப்பாய் கல்லூரி வீதியைச் சேர்ந்த காலஞ் சென்ற தம்பு கந்தப்பிள்ளை சிவஞானம் என்பவரின் மரணசாதன மில்லாச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

சிவஞானம் கைம்பெண் ஜயரஞ்சனி கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்

இல. 3425

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1979ம் ஆண்டு சித்திரை மாதம் 6-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்முனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

1979ஆம் ஆண்டு பங்குனி மாதம் 23ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 2040

---

## நல்லூரில் தமிழிசைவிழா 16-ம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அண்ணாமலைத் தமிழிசை மன்றத்தின் 21 வது ஆண்டுத் தமிழிசை விழா இம்மாதம் 16ம் திகதி நல்லூரில் ஆரம்பமாகவுள்ளது ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நாதஸ்வர வித்துவான் திரு. பி எஸ். ஆறுமுகப்பிள்ளை தலைமையில் ஆரம்பமாகும் இத்தமிழிசை விழா தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

முதல் நாள் நிகழ்ச்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தனும், எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் அதிபர் திரு. எஸ். தியாகராஜாவும் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். திரு. பி எஸ். ஆறுமுகம்பிள்ளை 'இசையரசு' என்ற பட்டமளித்துக் கௌரவிக்கப்படுவார். (அ)

---

## 'வங்கிகளை உடன் திறக்கவும்'

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில் வங்கிக்கிளைகளைத் தொடர்ந்தும் மூடிவைத்திருப்பதனால் பொருளாதாரப் பாதிப்பு ஏற்பட்டுளளது. நாட்டின் ஏனைய இடங்களில் ஏற்பட்ட வங்கிக் கொளளைகளைத் தொடர்ந்து வங்கிக் கிளைகள மூடப்படவில்லை. ஆனல் யாழ்ப்பாணத்தில் மட்டுமே மூடப்பட்டுள்ளன. மந்தநிலையில் உள்ள பொருளாதாரத்தை மீட்கவும் சிறுகடைக்காரர், தொழிலாளர், தொழிலதிபர். கமக்காரர், கடற்தொழிலாளர் ஆகியோரின் நன்மைகருதி மூடப்பட்ட வங்கிக்கிளைகளை உடனே திறக்கவும். இவ்வாறு தமிழர் பொருளாதார இயக்கம் நிதி அமைச்சரிடம் கோரியுள்ளது (கு-அ)

---

## இவர்களுக்கு குடிநீர் கிடைக்கும்

[சித்தங்கேணி]

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்குக் குடிநீர் விநியோகத்துக்காக வட்டுக் கோட்டைத் தொகுதிபாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு 35,000 ரூபா ஒதுக்கியிருக்கின்றார். இவ் வருட முடிவுக்குள் குடிநீர் வசதி கிடைக்கும் என நம்பப் படுகின்றது.

காரைநகர் எருக்கட்டுப் பொதுமக்களின் குடிநீர்வசதிக்காகப் பொதுக்கிணறு ஒன்றை அமைப்பதற்கும் திரு. திருநாவுக்கரசு 8,050 ரூபாவை ஒதுக்கியிருக்கின்றார். [வ]

---


## அந்தியேட்டி

15-3-79இல் சிவபதம் அடைந்த எனது தாயார் திருமதி செல்லப்பா செல்லமுத்து அம்மாளின் (கடையம்மா, பெத்தாச்சி, பூரணம் என்று அழைக்கப்படுவர்) துதி தசாவக் கிரியைகள் 3-4-79 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற்று மறுநாள் 4-4-79 புதன்கிழமை பகல் 12 மணிக்கு கிரகயக்ஞம் நடைபெறும்.

சகல கிரியைகளும் "நொத்தாரிஸ் இல்லம்" முதலாம் கட்டை, மானிப்பாய் வீதி, உடுவிலில் நடைபெறும்.

இங்ஙனம்
கா. சி. செ. முத்துக்குமாரு
பிரசித்த நொத்தாரிஸ் & இயக்குனர்,
ஏ. சி. எஸ். தொகுதி ஸ்தாபனங்கள்.
121, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 7460. 2047



## கேள்விப்பத்திர அறிவித்தல்

மண்டைதீவில் எமது சமாசத்தால் நிறுவப்படவிருக்கும் மீன் தூள் ஆலையின் கட்டிடம் அமைப்பதற்கு கேள்விகள் 16-04-79ம் திகதிவரைஏற்றுக்கொள்ளப்படும்.

1. கட்டிட அமைப்பு முறைகளும், விஸ்தீரண விபரங்களும் அடங்கிய வரைபடத்தைச் சமாசக் காரியாலயத்தில் பார்வையிட்டுக் கொள்ளலாம்.
2. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் மீளளிக்கப்படக்கூடிய கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக 1,000/- ரூபாவையும், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் படிவக்கட்டுப்பணமாக 100/- ரூபாவையும் சமாச அலுவலகத்தில் செலுத்திக் கேள்விப் பத்திரப் படிவங்களையும், கேள்வி நிபந்தனைகளையும், கட்டிடக் கணியங்களின் விபரங்களையும்பெற்றுக்கொள்ளலாம்.
3. இக்கேள்வி சம்பந்தமான இதரவிபரங்களைச் சமாச அலுவலகத்தில் காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
இல: 25, முன்வீதி,
யாழ்ப்பாணம்.
2038



## ஆசிரியர்கள் தேவை

### யூனியன் கல்லூரி

க. பொ. த (உயர்தர) வகுப்புகளில் பிரயோக கணிதம் படிப்பித்தற்கும், 6-ம் தரம் தொடக்கம் 11-ம் தரம் வரையும் நடனம் படிப்பிப்பதற்கும் வசதிக் கட்டணத்தில் நியமிக்க ஆசிரியர்கள் தேவை.

அனுபவம், தகைமை, வயது என்பனவற்றைக் குறிப்பிட்டு 9-4-79க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

அதிபர்

யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை 2044

# "மிளகாய் அறுவடை காலத்தில் அரசு இறக்குமதி செய்கிறதே"

## மிருசுவில் விவசாய மகளிர் கவலை

### "மருத்துவமனை இல்லாதது பெரும் குறை; பஸ்சேவை சீராக இல்லை"

### பத்திரிகையாளர் சுற்றுலா— 7

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதியில் ஒரேவெய்யில். நிழல்தரும்மரங்கள் இல்லை. எங்களை வெய்யில் வாட்டி வதக்கிவிட்டது அதிகமான குடியேற்றத் திட்டப் பெண்கள். மிளகாய், காய்கறிகளையே உற்பத்திசெய்திருந்தனர். தென்னை, மா, பலா போன்ற நிழல்தரும் பயிர்களைக் காணமுடியவில்லை

செல்வி புஷ்பராணியின் தோட்டத்திலிருந்து புறப்பட்டபோது வெய்யிலின் கொடுமையைத் தாங்கமுடியாமற்போய்விட்டது. கண் எல்லாம் ஒரே எரிச்சல். நா வரண்டுவிட்டது. பஸ்ஸில் ஏறினோம். நேராகத் திருமதி பரமேஸ்வரியின் தோட்டத்திற்குச் சென்றோம். விதியோரத்தில் அவர்களின் தோட்டம் இருந்தது.

அப்பாடா! ஒரே குளிர்மை! இவ்வளவு நேரமும் கொடும் வெய்யிலைத் தாங்கிக்கொண்டிருந்த பத்திரிகையாளர்களுக்கு இதமாக இருந்தது. தென்னை, பலா போன்ற மரங்கள் நிழல் தந்தன. நண்பகல் சாப்பாட்டையும் மறந்து. அங்கேயே படுத்துத் தூங்கவேண்டும் போலிருந்தது. அவ்வளவு குளிர்மை. சிலர் அங்கு இருந்துவிட்டார்கள். ஒருவர் அங்கிருந்த கதிரையில் 'ஹாய்'யாக படுத்துவிட்டார்.

#### உள்ளே ஒரு சிறிய கடை

உள்ளே சென்றதும் முதல் காணப்பட்டது ஒரு சில்லறைக் கடை. அங்கிருந்த விலைப் பட்டியலைச் சிங்களப் பத்திரிகையாளர் தட்டுத்தடுமாறிப் படித்தனர் அது ஒரு கூட்டுறவுக்கடையா? என்ற சந்தேகம் எழுந்தது. பின்பு அது ஒரு தனிப்பட்ட கடை என்பது தெரியவந்தது.

திருமதி சிவராசா சாவகச்சேரியைச் சொந்த இடமாகக் கொண்டவர். ஜி. சி. ஈ. சித்தியடைந்திருந்தார். சங்கத்தானை இந்துக் கல்லூரியில் பயின்றவர்.

#### கணவனும் ஒரு விவசாயி

அது ஒரு ஏக்கர் தோட்டம். கணவனும் ஒரு விவசாயிதான். நாங்கள் போன சமயம அவர் அங்கில்லை. பிள்ளைகளும் அடுத்த வீட்டிற்குப் போய்விட்டனர். பத்திரிகையாளர் பிள்ளைகளைப் படம் பிடிக்க விரும்பினார்கள். அங்கு நின்ற ஒரு இளைஞர்— பரமேஸ்வரியின் சகோதரனாக இருக்கவேண்டும். அவர் போய் பிள்ளைகளை அழைத்துவந்தார்.

படம் எடுக்கப்போவதாகக் கூறியதும், திருமதி பரமேஸ்வரி அதே ஆடையுடன், கைக்குழந்தையைத் தூக்கிவைத்துக்கொண்டு நின்றார். அருகில் மற்றொரு பெண்குழந்தை. அதற்கு 5 வயதிருக்கும். கைக்குழந்தை ஒரே கொள்ளை அழகு. பார்த்துக்கொண்டே இருக்கலாம் போலிருந்தது. நல்ல நிறம். 'யக் யக்' என்று முன்னால் நின்று பத்திரிகையாளர் வேடிக்கை காட்டினர். குழந்தை கமராவைப் பார்த்துச் சிரித்தபடியே இருந்தது. ஒரு நிமிடமா, இரண்டு நிமிடமா. மூன்று நிமிடம் வரை குழந்தை சிரித்தபடியே இருந்தது. ஆனால் கமரா சதி செய்துவிட்டது. ஒவ்வொரு முறையும் பிழைத்துக்கொண்டேயிருந்தது. கடைசியில் ஒருவாறு படம் எடுத்தாகிவிட்டது.

#### கேள்விகள் கேட்டனர்

திருமதி பரமேஸ்வரி, எங்களைத் தோட்டப் பக்கம் கூட்டிச் சென்றார். பயிர்கள் நன்றாக வளர்ந்திருந்தன. பத்திரிகையாளர் அவரிடம் கேள்விகள் கேட்டனர்.

நிருபர்; இப்பொழுது வருமானம் எப்படி?

பதில்; இப்ப குறைவு. வருமானமும் குறைவு. விலையும் குறைவு. அதனால் லாபம் எதிர்பார்த்தது கிடைப்பதில்லை.

நிருபர்; தொடர்ந்து வருமானம் குறைவென்றால் என்ன செய்யப்போகிறீர்கள்?

பதில்: வேறேதாவது முயற்சி செய்யவேண்டும்.

திட்டப் பொறுப்பதிகாரி செல்வி வி. குழந்தைவேலு, போதனாசிரியர் செல்வி பிலோமினா ஸ்ரனிஸ்லோஸ் ஆகியோர் எங்களை 'மண்டபத்திற்குப் போவோம், வாருங்கள்' என்று அழைத்தார்கள். புறப்பட்டோம் திருமதி பரமேஸ்வரியின் வீட்டில் கதிரையில் படுத்திருந்த பத்திரிகையாளர் ஒருவர் நன்றாக உறங்கியேவிட்டார் பின் ஒருவாறு அவரையும் எழுப்பிக் கூட்டிச் சென்றோம்

திட்டப் பொறுப்பதிகாரி செல்வி வி குழந்தைவேலுவிடம் குடியேற்றத் திட்டம் பற்றிய விபரங்களைப் பத்திரிகையாளர் அறிந்துகொண்டனர் செல்வி குழந்தைவேலுவிடம் கேள்விகள் கேட்டனர்.

நிருபர்: அரசாங்கத் திட்டமிருந்து உதவிப் பணம் எவ்வளவு கிடைக்கிறது?

பதில்: காடுவெட்டி, கட்டை பிடுங்க ஒரு காணிக்கு 400ரூபா கிடைக்கிறது. வேலிபோட ஒரு காணித்துண்டிற்கு 100 ரூபா கிடைக்கிறது.

நிருபர்: வேறென்ன உதவி?

ப: தற்காலிக கொட்டில் அமைக்க 300 ரூபா கிடைக்கிறது.

நிரு: கிணறு வெட்டவும் அரசு உதவுகிறதா?

ப: கிணறு வெட்ட 2800ரூபா தருகிறது. மலசலகூடம் கட்ட 250ரூபா தருகிறது.

நிரு: புதியதிட்டங்கள் ஆரம்பிப்பதற்கு காணிகள் இல்லையா?

ப: இல்லை.

நிரு: எப்பொழுது மகளிர் திட்டம் ஆரம்பமானது?

ப: 1967 ஆகஸ்ட் 6ந்திகதி.

நிரு: இதுவரை இங்கு வந்த எத்தனை பெண்கள் திருமணம் செய்துள்ளனர்?

ப: எண்பது பெண்கள்.

நிரு: திருமணம் முடித்த பின்பும் தொடர்ந்து இங்குதான் வாழ்கிறார்களா? அல்லது மாமியார் வீட்டிற்கு போய் விடுகிறார்களா?

ப: இங்குதான் வாழ்கின்றார்கள்.

நிரு: காணியைவிட்டு நிரந்தரமாகப் போனால் காணி ரத்துச் செய்யப்படுமா?

ப: ஆம். இதுவரை அப்படியான சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

நிரு: ஒரு கிணறு வெட்ட எவ்வளவு செலாகும்?

ப: கிட்டத்தட்ட 6000ரூபா தொடக்கம் 8000 ரூபா வரை செலவாகும்

நிரு: இங்கு காணி பெற்றுள்ள மகளிர் எல்லோரும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களா?

ப: ஆம்.

நிரு: காணிகள் எப்படிவழங்கப்படும்?

ப: மாவட்ட காணி அதிபர் நேர்முகப்பரீட்சை மூலம் காணிகளுக்குபெண்களைதெரிவு செய்வார்.

#### கோழிப்பண்ணைகள் இல்லை

நிரு: கோழிப்பண்ணைகள் இங்கு இல்லையா?

ப: ஆரம்பத்தில் கோழிப் பண்ணைகள் அமைக்கப்பட்டு இருந்தன ஆனால் கோழித்தீன் (மாஸ்) தற்பொழுது விலை கூடிய காரணத்தினால் கோழிப் பண்ணைகளைக் கைவிட்டுச் சொந்த தேவைக்காக கோழிகளை சிறிய அளவில்சிலர்வளர்க்கிறார்கள்

நிரு: எதிர்காலத்தில் கோழிப்பண்ணை நடத்தும் திட்டமுண்டா?

ப: மிளகாய், வெங்காயம் இவற்றின் விலை குறைவாக இருப்பதால் சில சமயம் எதிர்காலத்தில் கோழிவளர்ப்பல் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படலாம்.

நிரு: மின்சாரவசதியை எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள்?

ப: திட்டத்தில இதுவரை 40 பேருக்கு மின்சார விநியோக வசதி செய்ய படுள்ளது இவர்கள் மின்சாரத்தால் இறைக்கும் யந்திரத்தால் (மோட்டர்) பயிர்கள் செய்கின்றனர்

நிரு: மற்றவர்களுக்கும் மின்சாரவசதி செய்துகொடுக்கப்படுமா?

ப: ஆம். இதற்கானதிட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நிரு: இங்கு வேறு அபிவிருத்தி வேலைகள் நடைபெறுகிறதா?

ப: வீடமைப்பு இலாகாவினால் 77 பெண்களுக்கு புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது:

நிரு: வேறு திட்டங்கள்?

ப: மின்சாரத்தைப் பயன்படுத்தி எங்கள் திட்டத்திலுள்ள நெசவுநிலையத்தை மின் தறி நிலையமாக்கி அநேக பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் திட்டங்கள் உள்ளன.

நிரு: நெசவுநிலையத்தில் எத்தனை பெண்கள் கடமைபுரிகின்றனர்?

ப: நெசவு நிலையத்தில் தற்போது 50 பெண்கள் வேலை செய்கின்றனர்.

நிரு; தையல் நிலையத்தில்?

ப: தையல் நிலையத்தில் 15 பெண்கள் பயிற்சி பெறுகின்றார்கள் நெசவு நிலையத்தில் பயிற்சிபெற்ற பெண்கள் சிலர் நெசவுப்பயிற்சிக் கலாசாலையில் கூடிய பயிற்சிபெற்று நெசவு ஆசிரியர்களாகவும் கடமையாற்றுகின்றனர்.

#### பெண்களே பணியாற்றுகின்றனர்

நிரு: இங்கு கூட்டுறவுச்சங்கம் உண்டா?

ப: ஆம். ப. நோ. கூ. சங்கிளை ஒன்று உண்டு. இங்குள்ளவர்கள் அங்குதான் தங்களுக்குத் தேவையானவற்றை பெற்றுவருகின்றனர். இச்சங்கத்தில் முகாமையாளராகவும், விற்பனையாளராகவும் பெண்களே கடமையாற்றுகின்றனர்.

நிருபர்: இத்திட்டத்திற்கு பஸ் சேவையில்லையா?

பதில்: கடந்த வருடம் இத்திட்டத்திற்கு, பஸ்சேவை ஒன்றுஆரம்பிக்கப்பட்டது இச்சேவை சீராக இயங்காத காரணத்தினால், பெண்கள் போக்குவரத்துக்கு மட்டுமன்றி தாங்கள் உற்பத்திசெய்த பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

#### மருத்துவமனை இல்லை

நிருபர்: வேறுஎன்ன குறைகள் உண்டு?

பதில்: இங்கு ஒரு மருத்துவமனை இல்லாதது பெரும் குறையாக இருக்கின்றது.

நிருபர்: இங்கு காவலாளி இருக்கிறாரா?

பதில்: ஆம் இருக்கிறார். என்னையும், போதனாசிரியரையும் காணி ஆணையாளர் திணைக்களம் நியமித்துள்ளது.

நேரம் போய்க்கொண்டிருந்தது பத்திரிகையாளர் குழுவிற்கு பொறுப்பாகவிருந்த தகவல் அதிகாரி, அடுத்த நிகழ்ச்சிக்குச் செல்லவேண்டும் என அவசர படுத்தினார்.

செல்வி குழந்தைவேலுவிடம், இத்திட்டப்பற்றி இன்னும் எத்தனையோ விபரங்கள் அறியவேண்டியிருந்தது. ஆனால் அதற்கு நேரம் குறுக்கே நின்றது

நேராக குடியேற்றத்திட்ட காரியாலய மண்டபத்திற்குச்

(4-ம் பக்கம் பார்க்க)

— கா. யோகநாதன் —

# மக்கள் கருத்து

## சி. பா. த. மகாசபையின் கவனத்திற்கு

சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் மகாநாடு விரைவில் நடைபெறப்போவதாகச் செய்திகள் அடிபடுகின்றன. அநேக ஆண்டுகள் அசமந்தத்தின்பின் உயிர்பெற்றிருப்பது வரவேற்கத் தக்கது.

இச்சந்தர்ப்பத்தில் ஒருசிலவற்றை நினைவுபடுத்திக்கொள்வது சாலச்சிறந்தது.

சிறுபான்மைத் தமிழருள் பலபிரிவுகளுண்டு, அவைகளில் ஏற்ற, இறக்கங்களும் உண்டு, அவற்றை மேல், கீழ் என்று குறிப்பிடலாம். மேற்பிரிவின் இரண்டு பகுதியினருள் கணிசமானோர், தவறணைத் திட்டத்தினால், பெரும்பணம் பண்ணியிருக்கிறார்கள். கீழ்ப்பிரிவின் அவலம் சொல்லுந்தரமன்று.

ஆனால், ஒட்டு மொத்தமாகச் சிறுபான்மைத் தமிழர் மத்தியில் ஒரு பெரும் பசியுண்டு. அதுதான் நிலப்பசி.

சுதந்திரத்தின்பின் இந்நாட்டில் பல பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. வடக்கில் பதவியா, கிழக்கில் கல்லோயா, அல்லை, கந்தளாய், மேற்கில் தெதுறு ஓயா, ராஜாங்கனை, தெற்கில் அம்பலோயா, உடவளவை, சூரியவெவா என்பன குறிப்பிடத்தக்கவை. இவைகளில் பல லட்சக்கணக்கான நிலமில்லாத மக்கள் குடியேற்றப்பட்டனர். நம்மில் பத்துப்பேராவது இத்திட்டங்களில் பயனடைந்ததுண்டா? நம்மத்தியில் நிலப்பிரச்னை பூதாகரமாக வளர்ந்துகொண்டே வருகின்றது;

இத்தனைக்கும் மத்தியில் நாம் இந்நாட்டில் ஏற்பட்ட அரசாங்கங்களுடன் அனுசரணையாகவே நடந்திருக்கிறோம் நமது ஒத்துழைப்பு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளைக் கொண்டது. நமது மகாநாடுகளில் இலங்கரத்தின, பீலிக்ஸ் போன்றோர் கலந்து சிறப்பித்திருக்கிறார்கள் வடக்குகிழக்கில் தமிழரசுக் கட்சியின் பிரமாண்டமான சத்தியாக்கிரகத்திற்கு எதிராக, மறைமுக ஆதரவை அரசுக்கு வழங்கி முற்போக்காக நடந்திருக்கிறோம். பண்டா காலத்தில் எம் மவர் பௌத்தத்தைத்தழுவியிருக்கிறார்கள். டட்லி காலத்தில் கல்வி மந்திரி இரியகொல்லை தலைமையில் பல சிங்கள, பௌத்த பாடசாலைகள் திறப்பதற்கு ஒத்தாசைபுரிந்திருக்கிறோம். சிறிமா காலத்திலோ சொல்லவோ வேவையில்லை. நேரடியாக அரசிலிருந்து அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆதரவு வழங்கியிருக்கிறோம் மேலும் ஒருபடி முன்சென்று நம்சமூகத்தைத் தனியினமாகப் பிரகடனப் படுத்தவும் முயற்சிசெய்தோம்

இத்தனை சிறப்புக்களை நம் சமூகத்திற்குத் தேடுவதற்கு உழைத்த தலைவர்கள் நிலவிஷயத்தில் ஒன்றும் தெரியாதது போல், ஒரவஞ்சகமாகநடந்துகொள்வதின் மர்மம்தான் என்ன? சிலவேளை நாமெல்லோரும் நிலவுடைமையாளர் என்ற நினைப்போ. அல்லது அடுத்தவர், நிலத்தில் அண்டித்தான் வாழவேண்டுமென்ற வஞ்சனையோ. இல்லையேல் இங்குள்ள தரிசுநிலங்களில் அரை, கால் பரப்பு என்று அரசிடம் எடுத்தால் காணுமென்ற அலட்சியமோ.

இக்குறைபாடு, இன்று நேற்று உண்டானதல்ல, சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் ஆரம்பகாலம் தொட்டே இருந்துவருகிறது. இதைச் சபையின் நடவடிக்கைகளை ஆராய்பவர்களுக்கு இனிது புலப்படும். ஏனைய சிறப்பு நடவடிக்கைகளில் காட்டும் அக்கறையில் பத்துவீதம் தானும் இதில் காட்டாததின் மர்மம் என்ன? இதில்தமிழ் பௌத்த சங்கமும் அக்கறை காட்டலாம். ஏனெனில் பௌத்த சங்கங்களுக்கு எந்த அரசிலும் பெரும் செல்வாக்குண்டு

இன்றும் நிலைமை நழுவிப் போய்விடவில்லை. மதுறுஓயாத் திட்டத்தில் 45 ஆயிரம் புதிய குடும்பங்கள் குடியேற்றப்பட இருக்கின்றன. அதேபோ திருமலையில் வெண்டரசன் குளம் (வன்ஈல) திட்டத்தில் 10 ஆயிரம் குடும்பங்கள் குடியேற்றப்பட இருக்கின்றன.

ஆலயப்போராட்டங்களுக்கு அகில இலங்கை ரீதியாக விபரங்கள் திரட்டுபவர்கள் இந்தச் சமூகஆக்கபூர்வ நடவடிக்கைக்கு விபரங்கள் சேகரிக்கக் கூடாதா?

மேலும் ஜனதிபதி தெற்கில் தமிழரை குடியேற்றப்போவதாக அறிவித்திருக்கிறார் இது நாமும் தென்இலங்கை முஸ்லிம்கள் போல் ஐக்கியப்பட்டு முன்னேற அருமவாய்ப்பு எம் மக்கள் மத்தியில் அமரர் பொன் கந்தையா, அடிக்கடி சொல்லி நினைவூட்டிய மகாவலி, இன்று வடமத்திய மாகாணம், மத்திய மாகாணங்களில் ஐந்து கட்டங்களில் அமுல்நடத்த பட இருக்கின்றது இப்பாரிய பெரும் திட்டங்களில் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நம்மவர்களின் நிலப்பசியைத் தீர்க்க உதவுங்கள் மகாவலியில் நிலம் பெறுபவர்களுக்கு ஒரு வருடத்து முழுச் செலவையும் ஐ நா சபையின் உணவுப் பிரிவு ஏற்கிறது என்பது மிகவும் முக்கியமானது

இது நம்முன்னுள்ள தலையாய பெருங்கடமை இதை மகாநாடு கூட்டுபவர்கள் கவனித்துக்கொள்வார்களா?

க, நாகமுத்து
மந்திகை, புலோலி.

# "புதியஉதவிஅரசாங்கஅதிபர் பிரிவை உடன் நிறுவுக"

## — பண்டிதர்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவுக்கும் நயினுதீவுக்கும் முந்திய அரசாங்கம்செய்த ஒழுங்கின்படி இரண்டு அமைச்சர்கள் கொடுத்த வாக்குறுதியின்படியும் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றிய இரண்டு அரசாங்க அதிபர்கள் ஏற்றுக்கொண்டபடியும் புங்குடுதீவு நயினுதீவு சேர்ந்த ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவை விரைவில் நிறுவுமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமாவுக்கு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் சென்ற எல்லை நிர்ணயக் குழுவும் இப்பிரிவை ஏற்றுக்கொண்டதென்பதையும், திரு. இராஜேந்திரா துரைசுவாமி அங்கம் வகிக்கும் மொரகொட எல்லை நிர்ணயக் குழுவும் இப்புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவை ஏற்றுக்கொண்டுள்ளது என்பதையும் பண்டிதர் இரத்தினம் சுட்டிக்காட்டியுள்ளார். (கு-அ)

# யாழ். நவீன மார்க்கட் 2-ம் கட்டக் கடைகள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் நவீனமார்க்கட் 2-ம் கட்டப்பகுதிகளில் டெண்டர் மூலம் கடைகள் பெற்றவர்களுக்கு நேற்று முன்தினம் மாநகரசபை ஆணையாளர் திரு. கே.சிவஞானம் கடிதங்கள் அனுப்பியுள்ளார்.

குறிப்பிட்ட தினத்திற்குள் அதற்குரிய பணத்தைக்கட்டி கடையைத் தெரிவு செய்து பொறுப்பேற்குமாறு அவர் தெரிவித்துள்ளார்.

பழைய கடைக்காரர் ஏழு பேருக்குமுரிய கடிதங்கள யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருபதாக ஆணையாளர் தெரிவித்தார்.

டெண்டர் மூலம் கடை எடுத்தவர்கள் தங்களுக்குரிய கடைகளைத் தெரிவு செய்தபின்னரேபழையகடைக்காரர்களுக்குக்கடைகள் வழங்கப்படும்.

பழைய கடைக்காரர்களுக்கு வழங்கப்படும் 7 கடைகளைத் தவிர மற்றக்கடைகள் யாவும் டெண்டர் கோரியவர்களுக்கு வழங்கப்படும்.

தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 7 கடைகளையும் தாங்கள் பொறுப்பேற்கப்போவதாகப் பழைய கடைக்காரரான திரு எம். வி சின்னராசா தெரிவித்தார்.

தங்களுக்குப் பழைய இடத்தில் கடைகள் கிடைத்தால் நல்லதென்றும் அவர் சொன்னர்.

7 கடைக்காரர்களும் 7 கடைகளுக்குரிய பணத்தை சமபங்காக மொத்தமாகக் கட்டிக்கடைகளைப் பொறுப்பேற்கவிருப்பதாகவும் அவர் கூறினர். [க-அ]

## பாண்டியில் மதுவிலக்கு!

புதுச்சேரி, மார்ச் 31

பாண்டிச்சேரி மாநிலம் முழுவதிலும் இவ்வருடம் மே மாதம் முதல்பூரணமதுவிலக்கு அமுல் செய்யப்படும் என்று லெப்டினன்ட் கவனர்குல்கர்ணி அறிவித்துள்ளார்

# ச. ச. நிலைய புதிய கட்டிடத் திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

"அல்வாய் மனோகரா சனசமூக நிலையம் நல்ல அழகாகவும், பொலிவாகவும் விளங்குகிறது. இந் நிலையத்துக்குப் போதிய நிலத்தை அன்பளிப்புச் செய்த திரு. சி. கந்தவனத்தின் சேவை பாராட்டுக்குரியது. எனது ஊரிலுள்ள இந் நிலையம் ஐம்பது வருடங்களுக்கு மேலான வரலாறு உடையது. உடுப்பிட்டித் தொகுதி அபிவிருத்தி நடவடிக்கைகட்கும், கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கும் என்னாலான உதவியைச் செய்வேன்.

இவ்வாறு அல்வாய் மனோகரா சனசமூகநிலையப் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்துப்பேசிய உடுப்பிட்டி எம் பி திரு த. இராசலிங்கம் குறிப்பிட்டார்.

அதிபர் திரு ஆ கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பருத்தித்துறை எம் பி திரு க துரைரத்தினம் மின்னொளியை ஏற்றி வைத்துப் பேசுகையில் "அல்வாய்க் கிராமம் இன்னும் நல்ல முன்னேற்றம் அடையவில்லை என்பதை அறிந்தே பல அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப் படுத்தியுள்ளேன் எனது தொகுதியிலேயே உடுப்பிட்டி எம் பி இருக்கிறார் இருவரும் சேர்ந்து முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவோம்" என்றார்

திரு தா வீரசிங்கம், திரு க மார்க்கண்டு, திரு த செல்வராசா, செல்வி செல்லையா சாரதாதேவி ஆகியோரும் பேசினர் (கு-அ)

## வடமராட்சி மாணவர்களுக்கு உபதேசம்

(புலோலி)

இலங்கையில் உயர்ந்த இராசகோபுரத்தைக் கொண்ட சைவாலயங்களில் ஒன்றும், வடமராட்சிப் பகுதியின் சரித்திரப் பிரசித்தி பெற்றதுமான பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகராலய சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகத்தையொட்டி, நல்லைஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கடந்த மாதம் 19-ம் திகதி தொடக்கம் மஹாபாரத, ராமாயண விரிவுரைகள் நடாத்திவருகிறார்.

சுவாமிகள் இங்கு தங்கியிருக்கும் நாட்களில் பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரனின் வேண்டுகோளுக்கிணங்க வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று மாணவ மாணவிகளுக்கான விரிவுரைகளை நடத்திவருகிறார். (அ)

## உற்சவம்

[சித்தன்கேணி]

வட்டுக்கோட்டை களவியோடை ஸ்ரீமுத்து மாரியம்மன் கோவில் வருடாந்த உற்சவம் நேற்று ஆரம்பமாகியது தொடர்ந்து பத்து திருவிழாக்களும் நடைபெற இருக்கின்றன.

### காங்கேசன்துறைமுகத்தில்

## மா இறக்குமதியால் ரூ. 1,30,000

# அந்நிய செலாவணி மீதம்

[காங்கேசன்துறை]

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு ஒருலட்சத்து முப்பத்திரண்டாயிரம் மூடை மாவுடன் வந்திருந்த "எம். வீ. மன்ஸ்ரார்லான்ட்ஸ்' என்னும் கிரேக்கக் கப்பலில் இருந்து குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் இறக்குமதி வேலைகளைப் பூர்த்திசெய்த காரணத்தால் இலங்கை அரசாங்கத்திற்கு ஒருலட்சத்து முப்பதினுயிரம் ரூபா அந்நிய செலாவணியாகக் கிடைத்துள்ளது.

காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு இவ்வருடம் முதலாவதாக வந்த இக் கப்பல் பிரான்ஸ் தேசத்தில் இருந்து மா மூடைகளை ஏற்றி வந்திருந்தது இக்கப்பலின் இறக்குமதி லொறிப்போக்குவரத்து வேலைகளை கப்பல் ஏஜண்டுகளான க ஜெயபாலசிங்கம் கொம்பனியினர் மேற்கொண்டிருந்தனர்.

இலங்கை அரசாங்கம் கப்பல் கம்பனியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இக்கப்பலில் இறக்குமதி வேலைகளைப் பன்னிரண்டு நாட்களில் பூர்த்திசெய்யச் சம்மதித்திருந்தார்கள். ஆனல் க ஜெயபாலசிங்கம்கம்பனியினர் எட்டு தினங்களில் இறக்குமதியைப் பூர்த்திசெய்ததன் மூலம் குறிப்பிடப்பட்ட காலத்திலிருந்து நான்கு நாட்கள் முடிந்து இவ்வந்நிய செலாவணியை இலங்கை அரசுக்குப்பெற்றுக் கொடுத்துள்ளனர்.

இக்கப்ளின் இறக்குமதி வேலைகளில் வடபகுதியைச் சேர்ந்த ஆயிரம் தொழிலாளர்களும், நூறுலொறிகளும், ஈடுபட்டிருந்தன. இலங்கையின் வேறுதுறைகளில் காணப்படும் வசதி இல்லாதிருந்த போதிலும் துறைமுகத்தொழிலாளரின் சாதனையை அறிந்து உணவு இலாகாவினர் தொடர்ச்சியாக மேலும் பல அரிசி மா ஆகியவற்றைக் கொழும்புத்துறைமுகத்துக்குக் கொண்டுவரும் கப்பல்களைக் காங்கேசன் துறைமுகத்துக்குத் திசைதிருப்பத்திர்மானித்துள்ளனர்.

### 6ந் திகதி அரிசியுடன் கப்பல் வரும்

எம். வீ. லங்கா கல்யாணி என்ற இலங்கை கூட்டுதாபனக் கப்பல் ஐயாயிரம் தொன் சீன அரிசியுடன் காங்கேசன் துறைமுகத்திற்கு இம்மாதம் 6ம் திகதி வந்துசேர இருக்கின்றது. இக்கப்பலின் இறக்குமதி வேலைகளை யாழ்.மாவட்ட கூட்டுறவு துறைமுகத்தொழிலாளர் சேவைச்சங்கம் மேற்கொள்ளும். [கொக் அ]

## தவக்கால நற்சிந்தனை

"கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மட மட என்று அகன்று போம். பூதங்கள வெந்து உருகிப் போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.

இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!"

கிறிஸ்துவின் வழியை நாம் உண்மையாகவே பின்பற்றுகிறோமென்றால் முதலில் நம்மை நாமே தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டு. பிறர் துன்பங்களை நம் துன்பங்களாக ஏற்று, பாவக் குழியில் வீழாமல ஆன்ம மன்னிப்பிற்காக ஆண்டவனை வேண்டிக் கொள்ள வேண்டாமா? உண்மையான கிறிஸ்தவர்களாகிய நாம் மரணத்தை என்றென்றைக்கும் வரவேற்று, மரணம் நம்மை வந்து அணைப்பதற்குள், ஆன்ம மீட்சிக்காகவும், ஆண்டவனின் அருளைப் பெறவும நம்மை நாமே ஆக்கிக் கொள்ள வேண்டாமா?

—ஞானஒளி

தொகுப்பு : வில்பிறெட்

### தமிழ்பேசும் தபாலதிபர்கள்

# முதலாம்தர பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்பு

[யாழ்ப்பாணம்]

தபால் அதிபர்களின் பதவி உயர்வுகளைத் தாமதிக்கும்படி கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை தபால் தந்தி அமைச்சர் திரு. விஜயதுங்காவிற்கு அனுப்பியுள்ள தந்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்திற்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தையில் திறைசேரி சுற்றறிக்கை 769ஆல் ஏற்படும் தீமைகளை தபால்தந்திப் பகுதியில் நீக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்க உடன்பாடு ஏற்பட்

(5-ம் பக்கம் பார்க்க)

# மிளகாய் அறுவடை...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

சென்றேம். வாசலில் மேற்பார்வையாளர் திரு. எம். குலநாயகம் வரவேற்று அழைத்துச் சென்றார்.

அந்த நண்பகல் நேரத்திலும், குடியேற்றத்திட்ட பெண்கள், மண்டபத்தில் நிரம்பிவழிந்துகொண்டிருந்தார்கள், பத்திரிகையாளரும் மண்டபத்திற்குள் அமர்ந்து கொண்டார்கள்.

தலைமைவகித்த திரு. எம். குலநாயகம், குடியேற்றத்திட்டம் ஆரம்பம்பற்றி விபரமாக எடுத்துக் கூறினர். இங்கு கூட்டுறவுச் சங்கமும், நெசவு நிலையமும், தையல் நிலையமும் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

### காணிகளுக்கு கிராக்கி

தற்பொழுது காணிகளுக்கு பெரும் கிராக்கியிருப்பதாகவும், போதிய காணியில்லாததினுல் கடைசியாக அரை ஏக்கர் வீதம் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்கள் அங்கிருந்த மகளிர்களிடம் கேள்விகள் கேட்டார்கள்.

நிருபர்: இங்கு முதலில் இளைஞர்கள் வந்து இடையில் சென்றுவிட்டதாகவும், பின் இக்காணிகள் பெண்களுக்கு வழங்கப்பட்டதாகவும் அறிந்தோம். பெண்கள் இளைஞர்களிலும்பார்க்க திறமைமிக்க விவசாயிகள் என்கிறேம்?

சரோஜினி: அப்போது மணல் தறையாக இருந்தபடியாலும், தண்ணீர் வசதியில்லாதபடியாலும் இளைஞர்கள் சென்றுவிட்டனர்.

நாகம்மா: இளைஞர்கள் கூடுதலான வருமானத்தை எதிர்பார்ப்பவர்கள்; நாங்கள் வருமானம் குறைந்திருந்தாலும் பொறுமையாக இருந்து விவசாயத்தில் ஈடுபடுவோம்

நிருபர்: இங்கு கிடைக்கும் வருமானம் உங்களுக்குத் திருப்தியளிக்கிறதா?

நாகம்மா: மிளகாயின் விலை ஏறினுல் திருப்தியாக இருக்கும் இப்பொழுது பசளை மருந்து விலை அதிகம். அதனுல் நட்டமாகத்தானிருக்கிறது நெல்லுக்கு உத்தரவாத விலையாக 40 ரூபா என்று அறிவித்துள்ளார்கள் அதேபோல் மிளகாய்க்கும் அரசு ஒரு விலையை அறிவித்தால், விவசாயிகள் மிளகாய்ச் செய்கையில் ஊக்கம் காட்டுவர்கள். மிளகாய்க்கும் உத்தரவாத விலை வேண்டும்.

### மிளகாய் இறக்குமதி

நிருபர்: வேறு என்ன கூற விரும்புகிறீர்கள்?

நாகம்மா: மிளகாயை அறுவடை செய்யும் காலம் பார்த்து அரசு, மிளகாயை இறக்குமதி செய்கிறது. இதனுல் ஒரு றுத்தல் மிளகாய் 5 ரூபாவாக குறைந்துவிடுகிறது, இந்த நிலையில் எப்படி மிளகாய் செய்ய முடியும்.

நிருபர்: பொழுது போக்கு என்ன?

பதில்: திரைப்படப் பிரிவினர் சில நாட்களில், இங்கு வந்து படம் காண்பிப்பார்கள். அதைவிட பொழுது போக்கு எதுவும் இல்லை.

நிருபர்: வலைப்பந்தாட்டம்?

பதில்; இல்லை.

நிருபர்: இங்கு நிரந்தரமாக வேலை செய்ய விரும்புகிறீர்களா?

பதில்: எங்களுக்குச் சில கஷ்டங்களிருக்கிறது. உருளைக் கிழங்கு அறுவடை செய்யும் காலத்தில் அரசு உருளைக்கிழங்கை இறக்குமதி செய்கிறது. இதனுல் விலை வீழ்ச்சியடைகிறது. வெங்காயமும் அதே போல்தான். அரசு இறக்குமதியைத் தடைசெய்து இவற்றிற்கு உத்தரவாத விலை போடுமானுல், எங்கள் கஷ்டங்கள் தீரும்.

மண்டபத்தில், மகளிர் பத்திரிகையாளர்களுக்கு, முதலில் 'பிஸ்கட்' கொடுத்து உபசரித்தார்கள். குளிர்பானமோ தேநீரோ வருமுன்னரே கூட்டம் முடிவடைந்துவிட்டது. எங்களுக்கு ஒரே தாகம்; நா வறண்டுவிட்டது. வீதியில் நின்ற பஸ்ஸை நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம். காரியாலய வாசலில் செல்வி தங்கரத்தினமும், சில மகளிர்களும் பத்திரிகையாளர்களுக்கு, வழியில் தேநீர் வழங்கிக்கொண்டிருந்தனர். ஓடிச்சென்று தானும் ஒரு 'கப்'பை எடுத்துக்கொண்டேன். மணி ஒன்றுக்கு மேலாகி விட்டது. கொடிகாமம் தெங்கு பனம்பொருள் உற்பத்திச் சங்கத்திற்கு செல்லவேண்டும். அதே நிகழ்ச்சிக்குப் பின்னர்தான், சாவகச்சேரி வாடிவீட்டில் எங்களுக்கு நண்பகல் போசன விருந்து.

கொடிகாமத்தில் நடந்தவற்றை நாளை தருகிறேன்.

(வளரும்)

RIO (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Count Down To Doom's Day

வெலிஸி
(காங்கேசன்துறை)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி
வீரஅபிமன்யு

ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 6-15&9-45
ஜெய்சங்கர் - விஜயநிர்மலா
உயிரா மானமா
(புத்தம்புதிய பிரதி)

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) எம்.ஜி.ஆர்.-சரோஜாதேவி
திருடாதே (புதிய பிரதி)

14-வது வாரம்
வின்ஸர் போன்: 466
தினசரி 5 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா தினசரி 10-30, 2-15, 6-15 & 9-45
(யாழ்நகர்) ஜெமினி - சாவித்திரி நடித்த
கற்புக்கரசி
புத்தம்புதிய பிரதி

REGAL Daily 4-30, 7-00 & 9-30 p.m. only
(Jaffna)
KENNETH WILLIAMS in
CARRY ON BEHIND
(Comedy — Color)
From 4-4-79
THREE YELLOW CATS

வெலிங்டன் தினசரி: 2-30, 6-30&9-45
(யாழ்போணம்) சனி, ஞாயிறு 10-30,2-30
6-30 & 9-45
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
சாரதா
(புதியபிரதி)

லிடோ போன்: 7638 தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) கஸ்தூரி விஜயம்

தினசரி 4 காட்சிகள்
ராணி சிவாஜி - பத்மினி
(யாழ். நகர்) டி. ஆர். மகாலிங்கம்
ஸ்ரீ வள்ளி
(புதிய பிரதி—கலர்)
குறிப்பு: யாழ் நகரில் இதுவே கடைசித் தடவையாக திரையிடப்படுவதால் ஏமாற்றத்தைத் தவிர்க்க முந்துங்கள்.

மகத்தான ஜனத்திரள் நிறைந்த கடைசி வாரம்!
காட்சிக்குக் காட்சி ஜனக்கூட்டம் - பார்த்தோர் மீண்டும் மீண்டும் பார்க்கும் மன நாட்டம்.
சாந்தி போன்: 7642
யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
விநோத் கன்னா (வடநாட்டு ரஜனிகாந்த்)
கபீர் பேடி...மௌசமி சட்டர்ஜி...பகவான்...
பின்னணி: லதா மங்கேஷ்கர்
"கச்சே டாக்" - ஹிந்தி கலர்
Also: GORA AUR GALA Hindi Color (TRAILER)

# வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சை முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

வட இலங்கைச் சங்கீத சபைப்பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ள. 1978 ம் ஆண்டில் நடைபெற்ற இப் பரீட்சை முடிவுகள் தொடர்ந்து 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியிடப்படும்:-

o இவ்வடையாளம் சாஸ்திரப் பரீட்சையில் விசேட சித்தி.

f இவ்வடையாளம் செயன்முறைப் பரீட்சையில் விசேட சித்தி.

## இரண்டாம் பகுதி
## யாழ்ப்பாணம்
### முதலாம் பிரிவு
(நேற்றைய தொடர்ச்சி)

**வீணை:-**

o கல்யாணி பாலசிங்கம், லோகநாதன் தேவராஜா, o யாழினி நமசிவாயம், o சித்ரா சிவஞானம், f தர்ஸினி திலகராசா, சுகந்தி ஜெகநாதன் (மே. பா), f o மஞ்சுளா சிவகுருநாதன், ஜெயந்தி வரதராஜா (மே. பா), o சத்தியறூபி புவிராசா; o நளினி செல்வத்துரை, o சாமினி அற்புதானந்தா, o டெப்பக்குமா தில்லைநாதன், o சிவானுஜா சோமசேகரசுந்தரம், o கௌரி முத்துக்குமாரசாமி.

**பாட்டு:-**

o பாலநாயகி பாலசுப்பிரமணியம், லோகநாதன் தேவராஜா, o காஞ்சனா இராமச்சந்திரசர்மா, o சசிகலா குருசாமி, f உத்தரை இரத்தினசபாபதி, உருத்திராதேவி இரத்தினசுவாமி, லலித் யூலியற் பிறெட்றிக், o சிவானுஜா சோமசேகரசுந்தரம், o பாக்கியலட்சுமி கனகரட்ணம், சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன், o யசோதை தியாகராசா, லீலாவதி முருகேசு, o சிவஞானதேவி சிவஞானரெட்ணம்.

**வயலின்:-**

o சந்திரகுமாரி கந்தசாமி.

**புல்லாங்குழல்:-**

o துளசிமனோகரி திருநாவுக்கரசு, o f சபாரத்தினம் நாவலன்.

### இரண்டாம்பிரிவு

**பாட்டு:-**

o சாமினி அற்புதானந்தா, o தேன்மொழி பரமானந்தம், o கௌரிமனோகரி இராசரத்தினம்.

**வீணை:**

தபோரஞ்சினி மிருகண்டு.

[தொடரும்]

## முதலாம்தர...

(4ம்பக்கத் தொடர்ச்சி)

டது.

இந்த உடன்பாட்டுக்கு அமையவே, கோப்பாய் எம். பி. திரு. கதிரவேலுப்பிள்ளை தபால் அமைச்சருக்கு மேற்கண்ட தந்தியை அனுப்பியுள்ளார். [illegible]

இதன் காரணமாக இதுவரை பதவி உயர்வு மறுக்கப்பட்டிருந்த நூற்றுக்கும் அதிகமான தமிழ்பேசும் தபால்அதிபர்கள், முதலாம் தரத்திற்கு பதவிஉயர்வு பெறக் கூடிய வழிவகைகள் ஏற்பட்டுள்ளன.

இதுவிடயமாக தபால் அதிபர்களான திரு. வி. எஸ். தங்கவடிவேல், திரு எஸ். சண்முகலிங்கம், கோப்பாய எம். பி யுடன் மேலும் தொடர்புகொண்டுள்ளனர்.

[க]

2-வது வாரம்
நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர். - ராதா சலுஜா
இதயக்கனி

# "மூடவிருந்த பாடசாலையை முன்னேற்றியவர்"

(தெல்லிப்பழை)

"இப்பகுதிச் சிறுபான்மைத் தமிழ்மக்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி கருதிக் கட்டப்பட்ட கட்டுவன்புலம் பாடசாலை, 5 ஆசிரியர்களுடனும், 100க்குக் குறைவான மாணவர்களுடனும் இருந்த காலத்தில் கல்வித் திணைக்களம் மூடிவிடத் தீர்மானித்திருந்த நேரத்தில், ஓய்வுபெற்ற அதிபர் திரு. கதிரவேலு பொறுப்பேற்று பத்து வருடங்களில் 500 மாணவர்களுடனும், 18 ஆசிரியர்களுடனும் என்னிடம் கையளித்தார். இவர் பாடசாலை வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாயிருந்தார்."

இவ்வாறு தெல்லிப்பழை கட்டுவன்புலம் பாடசாலையில் ஓய்வுபெற்ற அதிபர் திரு. வ. கதிரவேலுக்கு சேவை நலம் பாராட்டி அளிக்கப்பட்ட தேநீர் விருந்துபசார வைபவத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கல்லூரி அதிபர் திரு. சீ. சிவநாதபிள்ளை கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், "இப்பாடசாலை, சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம், அமரர் பொன். கந்தையா, திரு. வி. பொன்னம்பலம் ஆகியோரின் முயற்சியினால் இப்பகுதிகளைச் சேர்ந்த சிறுபான்மைத் தமிழ் மக்களின் பிள்ளைகளின் கல்வி நலன் கருதி ஆரம்பிக்கப்பட்டது" என்றார்.

காங்கேசன்துறைத் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. கா. சிவமகாராசா பேசுகையில், "தமிழர் மத்தியில் புரையோடியிருக்கும் சமூக ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்படவேண்டும்" என்றார்.

பெற்றார் ஆசிரியர் சங்கத்தால் நடாத்தப்பட்ட இவ் விருந்துபசாரத்தில் மேற்படி சங்கச் செயலாளர் திரு. க. வேலாயுதம், செந்தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் உட்படப் பலர் உரையாற்றினர்.

[கொக்.நி]

# இன்றைய பலன்

பங்குனிமாதம் 19-ம் திகதி
திங்கட்கிழமை
(2-4-1979)

**மேடம்:** சிறிவரும் கோபம் உங்களை நிலைதடுமாற வைக்கும், தானிய நஷ்டத்திற்கும் இடமுண்டு, அடக்கமும் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் தன்மையும் வேண்டும்.

**இடபம்:** வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும், எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும், சினேகிதர் வழியால் கவலைகள் தோன்றக் கூடும், விவசாயிகளாயின் ஏமாற்றத்திற்கு இடமுண்டு.

**மிதுனம்:** எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும், எதிர்பாராத முடிவுகளில் ஏமாற்றம் உருவாகும், உடல் நலமும் பாதிக்கப்படலாம், பொருளும் செலவாகும்.

**கடகம்:** போதுமென்ற மனத்துடன் இருப்பீர்கள், முதியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்குப் புதிய பாதையைக் காட்டும், குடும்பத்திலும் அன்பு தவழும்.

**சிங்கம்:** கடந்தகால எண்ணங்கள் அலைமோதும், அடுத்துக் கெடுப்பதற்கு சிலர் முனைவர், சகோதரவழியால் சஞ்சலப் படக்கூடிய செய்திக்கும் இடமுண்டு.

**கன்னி:** அறிவுப்பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும், வாகனசுகத்துடன் வாழ்க்கை நலனும் உண்டு.

**துலாம்:** மக்களால் மகிழ்ச்சி, புதுமையில் நாட்டம், முதியவர் ஒருவர் உங்களுக்கு நல்ல வழி காட்டுவார்.

**விருச்சிகம்:** வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப் படலாம், உடல்நலத்தைப் பேணவும், பகைமூட்டம் தோன்றும், பதட்டமும் உடன்சேரும்.

**தனுசு:** குடும்பத்தில் பிணி, மனத்திலே சுமை அதிகமாகும்.

**மகரம்:** கடமையில் தடை ஏற்படும், பிறர் நம்பிக்கையைத் தவிர்க்கவும், தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும்.

**கும்பம்:** வெல்லம்போல் இனிக்கும் வாழ்க்கை, இனபந்துக்களின் ஆதரவும் கிடைக்கும். எதிர்பாராத வரவிலும் திருப்தி ஏற்படும்.

**மீனம்:** கடமையில் முதலிடம் கிடைக்கும். பதவியில் உயர்வுக்கும் இடமுண்டு வியாபாரத் துறையில் தொடர்புகள் பெருகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# கோழிகளுக்கு நோய்த்தடுப்பு

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டைக் கிராம சபை அலுவலகத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை ஒரு மாதத்திற்கு மேற்பட்ட வளர்ந்த கோழிகளுக்கு மிருக வைத்திய இலாகாவினால் நோய்த்தடுப்பு ஊசி ஏற்றப் படவுள்ளது. இதற்கான ஒழுங்குகளைக் கிராமசபை செய்துள்ளது.

(அ)

# த. வி. கூ. கிளைகள் மூலம் கோழிக்குஞ்சு

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டைத்தொகுதியில் ஆர். ஐ ஆர்., வைற் லெக்கோன் ஆகிய இனகோழிக் குஞ்சுகளை தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள் மூலம் விநியோகம் செய்வதற்கு வட்டுக்கோட்டை எம். பி. ஏற்பாடுகளை செய்துள்ளார்.

[அ]

# இன்றைய திருவிழா

வண்ணை சிவன் கோவிலில் 11 ந் திருவிழாவாகிய இன்று பகல் திருவிழா காலை 9 மணிக்கு நடைபெற்று, பஞ்சமூர்த்திகள் மஞ்சத்தில் உள் வீதி வலம்வருதலும், மாலை 6-30 மணிக்கு வசந்தமண்டப பூஜையாகி பின் பிள்ளையார், முருகன் சுவாமி, அம்பாள், சண்டேஸ்வரர் சகிதம் பூதவாகனத்தில் திருவீதிவலம் வந்து திருவருள் பாலிப்பார்.

# மருந்து இல்லை

[சித்தன்கேணி]

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர் பெரிதும் கஷ்டமடைந்துள்ளனர். நோயாளரைப் பரிசோதிக்கும் டாக்டர் மருந்து இல்லை என்று நோயாளர்களை அனுப்பிவைக்கின்றார். நீண்ட காலமாக இவ் வைத்தியசாலையில் மருந்துகள் தட்டுப்பாடாக இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(அ)

# 'நாடகங்களை சாம்பாராக்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது'

## நாடகக் கருத்தரங்கில் 'வித்தி' கவலை

[யாழ்ப்பாணம்]

"தற்போது மேடையேறும் நாடகங்களைப்பற்றி மனதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடகங்களை ஒரு சாம்பாராக ஆக்கும் நிலை இன்று ஏற்பட்டுவருகிறது. அத்துடன் நாடகத்துக்கு ஏற்ற உடை அலங்காரங்களுடன் நாடகம் நடிக்கப்படுவதாகவும் தெரிவதில்லை. இக்காரணங்களால் நாடகங்களின் அழகு குன்றுகிறது" என்று பேராசிரியர் சு. வித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கை கலாச்சாரப் பேரவையின் நாடகக் கருத்தரங்கு யாழ். செயலக ஆலோசனைக் கூட்டத்தில் திட்டமிடல் பிரதி ஆணையாளர் திரு. கே. சி. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றபோது, அக்கருத்தரங்கை மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜெகநாதனும் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தனர். இதனைத் தொடர்ந்து பேராசிரியர் வித்தியானந்தன் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

நான் 20 வருடங்களாக இப்படியான கருத்தரங்குகளை நடத்தி, நாடகங்களை மேடையேற்றி, நாடகத்துறையில் சம்பந்தப்பட்டிருந்த காரணத்தால் தற்போதைய நாடகங்கள் சாம்பாராக ஆகும் நிலையில் உள்ளதை உணரக்கூடியதாக இருக்கிறது. முற்காலத்தில் நாட்டுக்கூத்துகள் நடைபெற்றபோது அதிகமாக தாழ்த்தப்பட்டவர்களால் நடத்தப்பட்டதால் அவற்றைப் பலர் மதித்துரசிக்கவில்லை. பின்னர் கலையரசு சொர்ணலிங்கம் பிற நாட்டு மொழிபெயர்ப்பு நாடகங்களை மேடையேற்றினர். அதன்பின் பேராசிரியர்களால் சமூக நாடகங்கள் பல்கலைக்கழக மாணவர்கள்மூலம் மேடையேற்றப்பட்ட போது அதிக மறுமலர்ச்சி ஏற்பட்டது.

நாடக பாரம்பரியம் மலர்ச்சியடைய, மரபுவழி நாடகங்கள் நடைமுறையில் கொண்டுவருவதுடன் அதற்குப் புதுமெருகு ஏற்றி கிராமங்களில் காட்டுதல் வேண்டும் நகரமக்களுக்கு மாத்திரம்காட்டும்போது பார்த்த பார்வையாளர்களே திரும்பவும் பார்ப்பதால் நாடகத்தின் ரசிகப் பெருமக்கள் தொகை குன்றுகிறது. கலாசாரப் பேரவை நாடகம் பழகும் இடம், ஒலி, ஒளி என்பனவற்றிற்கு வசதிகள் செய்துகொடுத்தல்வேண்டும். நாடகங்களுக்கு எழுத்துப் பிரதி முக்கியம், அத்துடன் ஒத்திகை சரிவர நடைபெற்றபின்பே நாடகம்மேடையேற்றப்படல்வேண்டும், நாடகங்களில் புதுமையைப் புகுத்தும்போது பழமைக்கும் மரியாதை கொடுத்தல்வேண்டும், எனக் குறிப்பிட்டார்.

தமிழ் நாடகக்குழு கலாச்சாரப் பேரவையின் தலைவர் கலாநிதி ஆ. கந்தையா உரையாற்றும்போது: "இன்றைய கலாச்சார அமைச்சு நாடகத்தைப் பொறுத்தவரையில் சாதி மொழி வேறுபாடுமையின்றி எல்லோரையும் சமமாகவே நடாத்துகின்றது. சிங்கள நாடகக்குழுவை எவ்விதம் நடாத்துகிறதோ அவ்வண்ணமே தமிழ்நாடகக் குழுவையும் நடாத்துகிறதை யிட்டு நாம் மகிழ்சியடைகிறோம். நம் நாடகக் கலையை முன்னேற்ற எமக்கு எவ்விதத் தடையும் இல்லை. நமது நாடக வளர்ச்சிக்கு முழுஆதரவும் வழங்க கலாச்சார அமைச்சு சித்தமாயிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்" என்றார்.

திரு. கே. சி. லோகநாதன் தமது தலைமையுரையில், "இலங்கைக் கலாச்சாரப் பேரவையின் நாடகக் கருத்தரங்கு இதுவே முதல்கருத்தரங்காகும் இன்றைய இக் கருத்தரங்கிற்கு சுமார் 126 நாடக மன்றங்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள்" என்றார். [கொக்-நிரு]

## நினைவாலயப் பூர்த்திக்கு 50 ஆயிரம் ரூபா தேவை!

### வாரி வழங்குமாறு 'சிவா' கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

"தமிழினத்தின் தந்தை செல்வாவின் நினைவாலயத்தைப் பூர்த்திசெய்வதற்கு மேலும் 50,000 ரூபா தேவையாக உள்ளது. இப்பணத்தை தமிழ் மக்கள் தங்கள் அபிமானத் தலைவரின் நினைவாக வாரி வழங்குமாறு நினைவாலய அறங்காவல் குழுவின் சார்பில் பணிவாக வேண்டுகிறேன்"

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பி யுமான திரு. எம். சிவசிதம்பரம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது. "தமிழினத்தின் தந்தை மறைந்து வருகின்ற ஏப்ரல் 26ம் தேதியோடு இரண்டுவருடமாகின்றது. அவர் எந்த லட்சியத்துக்காக வாழ்ந்து மறைந்தாரோ அந்த லட்சியம் ஒவ்வொரு தமிழ்மகன் மனதிலும் உறுதியாக இருக்கவேண்டும் என்பதற்காக தந்தை செல்வா நினைவாலயம் நிறுவுவதற்கு முடிவுசெய்து அதன் வேலைகள் துரிதமாக நடந்துகொண்டிருக்கிறது. இரண்டாவது ஆண்டு பூர்த்தியாகின்ற நாளன்று இந்நினைவாலயத்தைத் திறக்கவேண்டும் என்பது எம் பேரவா, இதற்கு மேலும் நிதிஉதவி தேவையாக உள்ளது. நிதியுதவி அளிக்க விரும்பும் அன்பர்கள் கோப்பாய் எம், பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். [ஈ]

## சிவநேசன் குடும்பத்திற்கு பொலிசாரின் நிதியுதவி

[புலோலி]

அண்மையில் வல்வெட்டித்துறை பொலிஸில் கடமையாற்றி துப்பாக்கிச்சூட்டிற்குப் பலியாகிய பொலிஸ் கான்ஸ்டபிள் கு. சிவநேசன் குடும்பத்தாருக்கு காங்கேசன்துறைப் பொலிஸ் அதிபர் பிரிவிலுள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலுமிருந்து 600ரூபா வழங்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமான சிவநேசன் தாய் தந்தையர்க்கு ஒரே பிள்ளையென்றும் இவர் சுடப்பட்டதைக் கண்டதாக எவரும் சாட்சியமளிக்கவில்லை எனவும் இதுசம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. நிஹால் ஜெயசேகரா தெரிவித்தார்.

## ஒத்திவைப்பு

(சித்தன்கேணி)

இலங்கைதொழில் நுட்பக் கல்லூரிகளின் சகல பயிற்சி நெறிகளுக்குமான இறுதி ஆண்டுப்பரீட்சைகள் அடுத்த மாதம் 14-ம் திகதிக்குப் பிற்போடப்பட்டிருக்கின்றன என்று பரீட்சைத்திணைக்களம் அறிவித்திருக்கின்றது இவை கடந்த மாதம் 14ம் திகதி நடைபெறவிருந்தது. [கு]

## மரண அறிவித்தல்

### செல்லாச்சி முத்தையா

அளவெட்டி திருமதி செல்லாச்சி முத்தையா காலமானர். இவர் காலஞ்சென்ற இன்சினியர் முத்தையாவின் அன்பு மனைவியும், சட்டத்தரணி திருநாவுக்கரசு, இராசரத்தினம் [ஏ, எம். பி], பாலசுந்தரம் [ரி. ஏ], புவனேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், கோபாலசுந்தரம் [உதவி அத்தியட்சகர், கால்நடைப் பகுதி கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு] அவர்களின் அருமை மாமியாருமாவார்.

ஈமைக்கிரிகைகள் இன்று [2-4-79] காலை 10 மணியளவில் அளவெட்டியில் நடைபெறும்,

உற்றார், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 2053

## ஜனாதிபதியை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

றத் திட்டத்தில் நேற்று முன்தினம் அத்துமீறி எல்லைகளை குடிசைகளை கட்டும் முயற்சியில் ஈடுபட்டபொழுது குருநகர் பொலிசாரால் எல்லைகள் யாவும் அகற்றப்பட்டு ஆறு பேர் கைது செய்யப்பட்டு விசாரணையின்பின்பு நேற்றுக்காலை விடுதலை செய்யப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து பல பொதுநலமன்றங்களின் பிரதிநிதிகள் தலைமையில் நாற்றுக்கும் அதிகமானவர்கள் நேற்று பிற்பகல் கூட்டணி காரியாலயத்தில் யாழ். எம். பியைச் சந்தித்து வீடின்றி மக்கள் படும் கஷ்டத்தை எடுத்துரைத்தனர்.

இதுவிஷயம் குறித்து நாம் பலமுறை அரசாங்கத்துக்கு முறையிட்டதாகவும் அரசு இவ்விஷயத்தில் மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதாகவும், இத்திட்டம் பற்றி இறுதி முடிவு எடுக்கும் பொருட்டு சனிக்கிழமைக்கு முன்னர் தாம் ஜனாதிபதியை சந்திக்கப் போவதாகவும், அதுவரையில் அத்துமீறி எல்லைகளை அமைப்பதை நிறுத்தும்படியும், தாம் எடுக்கும் முயற்சி பயனளிக்காதவிடத்து இறுதி நடவடிக்கைகளை தீவிரமான முறையில் மேற்கொள்ளப் போவதாகவும் திரு. வெ. யோகேஸ்வரன் கூறினர். [கொ. நிரு.]

## அரசுகூறும்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பேச்சுவார்த்தை நடத்தினர்கள். ஆதலால், அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தும்போது "தமிழ்ஈழம்" ஒரு முட்டுக்கட்டையாக இருக்குமென நான் நினைக்கவில்லை.

"கட்சி மாறுவது தொடர்பாக வெளிவந்த திருத்தம் பிழையானது என்று இந்தியாவில் பல தலைவர்கள் என்னிடம் கூறினர்கள்.

"வவனியா மாவட்டத்துடன், மதவாச்சியிலுள்ள 3 சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் சேர்ப்பது பற்றியும் சமணவளவை கோயில் பிரச்னை பற்றியும் அரசுடன் பேச்சு நடத்தியிருக்கிறோம். இவைபற்றி ஒரு சுமுகமான நடவடிக்கை எடுக்கப்படாவிடில் சாத்வீக முறையில் நேரடி நடவடிக்கையில் இறங்குவோம். அதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்று தெரியும்.

### இராசதுரை விவகாரம்

திரு. இராசதுரை விவகாரம் தொடர்பாக, விரைவில் அறிக்கையொன்று வெளியிடவிருக்கிறேன்.

"அவரின் உடல்தான் இப்போது அரசு பக்கம் சென்றிருக்கிறது. உள்ளம் எப்பவோ சென்றுவிட்டது. அவர் கூட்டணியிலிருந்து வெளியேறியதையிட்டு ஆச்சரியப்படவில்லை. வெளியேறுமல் இருந்தால்தான் ஆச்சரியப்பட்டிருப்பேன். (ம)

## ஈழத் தமிழருக்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துடைக்க, எங்களின் துன்பத்தை உலகறியச் செய்யக் குரல் கொடுங்கள்" என்று நான் வற்புறுத்திப் பேசியிருந்தேன்.

"இந்திய அரசே எமக்காகக் குரல் கொடுக்கும் வகையில் இது அமையவேண்டும்" என்றும் நான் கேட்டிருந்தேன். எமது நிலையை நன்குணர்ந்த இந்தியத் தலைவர்கள், "இது எமது கடமை" என்று என்னிடம் தெரிவித்திருந்தனர். "இந்தியத் தலைவர்களையும், மக்களையும் எமக்காகப் போராடும்படி நான் கோரவில்லை. போராட்டத்துக்கு ஆதரவு தாருங்கள் என்றே கேட்டிருந்தேன். போராடுவது எமது கடமை. எதிர் வரும் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் கூடும்போது எதிரொலி பலமாக இருக்கும். எந்த ஒரு இடத்திலாவது ஒரு நாள் எமது பிரச்னை வெடித்தால்தான் பிரச்னை முழுமையாகத் தீரும்" என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினர் (ம)

## யாருடைய திறப்புக்கோர்வை?

யாழ். பஸ்நிலையத்தில் ஒரு புத்தக நிலையத்தில் தவறவிடப்பட்ட திறப்புக்கோர்வை ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் வந்து காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## மரண அறிவித்தல்

### சபாபதிப்பிள்ளை சபாரத்தினம்

வேலணையூர் பொட்டர் சபாபதிப்பிள்ளை சபாரத்தினம் [இளைப்பாறிய ஆசிரியர்] காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பொட்டர் சபாபதிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும், மகேஸ்வரியின் அன்புக்கணவரும், சபானந்தன் [கணக்காளர், துபாய்] டாக்டர் சபாநாதன் [இங்கிலாந்து], சபாலிங்கம் [தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்], சபாநேசன் [பொறியியலாளர், கட்டிடத்திணைக்களம்] கௌரி, வானதி, சபாஈசன், சுமதி, சபாநிரஞ்சன், ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவர் இவர் காலஞ்சென்ற சண்முகராசா, திருமதி சுந்தையா சாரதாதேவி ஆகியோரின் சகோதரரும் ஆவர். ஈமக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்பு அறிவிக்கப்படும்.

மனைவியும் பிள்ளைகளும்.

அச்சுக்கூட ஒழுங்கை, வைரவ கோவிலடி, தலையாளி, கொக்குவில் 2055

## மரண அறிவித்தல்

### ஜெனேவேவா தோமஸ்

இவர் காலஞ்சென்ற தோமஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற லீயோ தோமஸ், இராஜேந்திரம் தோமஸ், மங்கையர்க்கரசி சந்திரசேகரா, மனோன்மணி தோமஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற வீனுதோமஸ், திருமதி புஸ்பம் இராஜேந்திரம், திரு இம்மானுவேல் சந்திரசேகரா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவர். அன்னாரின் பூதவுடல் மாதகல் புனித அந்தோனியார் ஆலய சேமக்காலையில் திங்கட்கிழமை [இன்று] பிற்பகல் 4 மணியளவில் நல்லடக்கம்செய்யப்படும். 2054

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No Q3/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu; Telephone: 389,